விலை ரூபா 1—25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 30 ரூ ஆகிர் 13 இதழ் 308

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16-12-1986

## ஈ. பி. ஆர். எல். எவ். தள பிராந்திய பொறுப்பாளர் 'கபூர்' மரணம்!

(நமது நிருபர்)

தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்குமிடையே இடம்பெற்ற சர்ச்சையின் நேற்றைய மோதலில் ஈ. பி. ஆர். எல். எவ் இன் தளப்பிராந்தியப்பொறுப்பாளர் கபூர் மரணமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது

மேலும் வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள பிராந்தியங்களின் ஈ. பி, ஆர், எல், எவ். பொறுப்பாளர்கள், சுமார் 1000 உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் ஆயுதங்கள் உடைமைகள் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் வட்டாரம் தெரிவித்தன.

வன்னிப்பகுதிகளிலுள்ள காடுகளுக்குள் ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியைச் சேர்ந்த சிலர் தலைமறைவாயிருக்கலாம் என்றும் அவர்களைத் தேடும் வேட்டை தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு தொடக்கம் சகல பிரதான பாதைகளிலும் சந்திகளிலும் விடுதலைப் புலிகள் ஆயுதபாணிகளாக சந்தேகத்திற்கிடமான வாகனங்களைச் சோதனை நடத்

(8ம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாணசபை குறித்து இந்தியா புதியமாற்றுத்திட்டம்!

## சிதம்பரம் குழு இலங்கை கொண்டுவருகிறது

(கொழும்பு)

**இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் வகையில் இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேசமாகாணசபைத் திட்டத்தில், சமரச நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இந்தியக்குழு சில முக்கிய மாற்றங்களைச் செய்துள்ளது. இம்மாற்றங்கள் கிழக்குமாகாண சபை இணைப்புத் தொடர்பாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்திய மத்திய உள்துறை, நிர்வாக சீர்திருத்தத்துக்கான இணை அமைச்சர் திரு பி சிதம்பரம் வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு. கே. நட்வர்சிங். வெளியுறவுச் செயலர் திரு. ஏ பி. வெங்கடேஸ்வரன், அரசியல் யாப்பு நிபுணர் திரு எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோர் கொண்ட குழு நாளை கொழும்பு வரவுள்ளது. இவர்கள் இங்கு மூன்று தினங்கள் வரை தங்கியிருந்து அரசாங்க தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளனர்

இலங்கை அரசு இறுதியாக சமர்ப்பித்திருந்த பிரேரணைகளில் சில மாற்றங்களைச் செய்து அப்புதிய மாற்றங்

(5ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க விஜயம் குறித்து லலித் விளக்கம்!

கொழும்பு திங். ''எனது அமெரிக்க விஜயத்தின்போது இலங்கை இனப் பிரச்னை பற்றிய உண்மையான நிலையை அங்குள்ள உள்ளூர் சர்வதேச ஸ்தாபனங்களிடம் விளக்கிக் கூறினேன்''

(5ம் பக்கம் பார்க்க)

## விசேட ஜனாதிபதி ஆணைக்குழு 'கலால்' ஆணையாளர்மீது இன்று விசாரணை ஆரம்பம்

கொழும்பு, திங்கள் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணையை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளது.

முதல்தடவையாக இன்று ஆரம்பமாக இருக்கும் இவ்விசாரணையின் போது கலால் திணைக்கள ஆணையாளர். பிரதி ஆணையாளர் ஆகியோருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இவ்விசாரணையின் போது சாட்சியமளிக்க முப்பது சாட்சிகளுக்கு ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(வா)

## சென்னையில் கூட்டணி, போராளிகளுடன் சிதம்பரம் குழு பேச்சு

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இலங்கை அரசின் புதிய யோசனைகள்பற்றி இந்திய இணையமைச்சர்கள் திரு. பி. சிதம்பரமும் திரு. நட்வர்சிங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடனும், தமிழ்ப் போராளிக் குழுக்கள் சிலவற்றின் பிரதிநிதிகளுடனும் நேற்றுச் சென்னையில் பேச்சுவார்த்தை நடத்தினர்

சென்னை தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தைகளின்போது தமிழ் நாடுமுதலமைச்சர் திரு எம்.

(5ம் பக்கம் பார்க்க)

## அனுதரவான நிலையில் சிறுமி

யாழ்ப்பாணம், செவ். சிவப்புநிற சட்டையணிந்த சுமார் ஆறுவயது நிரம்பிய சிறுமி ஒருவர் யாழ். பஸ் நிலையத்தருகில் அனாதரவான நிலையில் மீட்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரி வீதி 76ம் இலக்கத்திலுள்ள வகுப்புத் தொழிலாளர் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பொது நிறமுடைய இச்சிறுமி கையில் சிறு விளையாட்டுப் பொருட்களையும் வைத்திருந்தார் அத்துடன் தங்கத் தோடும் அணிந்துள்ளார்.

## ஜனாதிபதி-டிக்ஸிற் சந்திப்பு

கொழும்பு, திங்கள் ''இலங்கையின் இனப்பிரச்னைக்குக் காணப்படும் தீர்வு இங்கு வாழும் எவ்வின மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தா வகையில் அமையவேண்டும் என்பதில் இந்தியா அக்கறையாக உள்ளது'' இலங்கைக்கான இந்தியத் தூதர் திரு டிக்ஸிற் ஜனாதிபதியிடம் இவ்வாறு தெரிவித்தார்.

புதுடில்லியிலிருந்து இன்று காலை கொழும்பு திரும்பிய திரு. டிக்ஸிற் பின்னர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

(5ம் பக்கம் பார்க்க)

பிரயாண ஒழுங்கு

GLORIA TRAVELS

★ Norway ★ Germany

★ France ★ Canada

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் எமது பிரயாண முகவர் உடன் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் [BOND] விசா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

(A 3250)

## ஜனவரி முதல் வடக்கில் தீவிரவாதிகளின் பொலிஸ் நிலையங்கள்

### சிங்களப் பத்திரிகை தகவல்

கொழும்பு, திங்கள் அடுத்த வருடம் ஜனவரி முதல் வடபகுதியில் தீவிரவாதிகளினால் பொலிஸ் நிலையங்கள் நடத்தப்படவுள்ளதாக கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளன.

வடபகுதியில் யாழ்ப்பாணம் சுன்னாகம், பருத்தித்துறை, பலாலி, தொண்டமானாறு உட்பட பலபகுதிகளில் அமைக்கப்படவிருக்கும் இப்பொலிஸ் நிலையங்களில் ஓய்வுபெற்ற சுமார் அறுபது பொலிசார் கடமை ஆற்றுவார்கள் எனவும் உயர்ந்த பதவி ஒன்றுக்கு

(5ம் பக்கம் பார்க்க)

## தம்பிலுவில்லுவில் மூன்று விவசாயிகள் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு நிருபர்)

தம்பிலுவிலில் உள்ள காப்புத்துறையில் விவசாயிகள் புல்வெட்டிக்கொண்டு வரும் போது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் மூவர் பலியானார்கள் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் அதிரடிப் படையினராக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

## தலைமன்னார் கடலில் கடற்படை-போராளிகள் மோதலில் 5மீனவர் மரணம்!

[நமது நிருபர்]

தலைமன்னார் கடற்பகுதியில் [illegible] இடையே நடைபெற்ற மோதலில் 5 மீனவர்கள் பலியானார்கள். இரு கடற்படையினர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, மேலும் அ படகிலிருந்த சிலரின் நிலைமைபற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை தலைமன்னார்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Christampu Farm Golden comets சிவப்பு சேவற்குஞ்சுகள் 17-12-1986 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. Nallur Farm Centre நல்லூர்வீடியோ சென்ரர்), 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தை, நல்லூர். C 6220)

நத்தார் மலிவு விற்பனை, நவீனமான, கவர்ச்சியான உருக்கு, மரத்தளபாடங்கள் மலிவான விலைகளில் விற்பனையாகின்றன. கையிருப்பு முடியும்வரை மட்டுமே டைனமிக் எஞ்ஜினியறிங் லிமிற்றெட், 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. [சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக]. A 3324

சகல விதமான றேடியோ உதிரிப்பாகங்கள், ரெலிவிசன் துணைப்பாகங்கள் விற்பனைக்குண்டு. திருத்துனர்களுக்கு விசேட கழிவுண்டு நியூ சிற்றி றேடர்ஸ், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 24055 (A3307)

Sony 3000 வீடியோ கமரா Record Player (Akai), Akai டெக், Akai ஸ்பூல்ஸெற், மற்றும் அம்பிலிவயர்,மின் விசிறி முதலியன 131,அரசடி ரோட், கந்தர்மடம்.(சரணாலயம் முன்பாக) (C 6368)

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, ஹோல் செற், கசற் றேடியோக்கள், Show case, Formica சாப்பாட்டு மேசைகள், வயலின், சிங்கர் தையல் மெஷின், கிளாஸ் வகைகள், Fisher டெக்; Lambrata ஸ்கூட்டர் T. V. Stand, விருந்தை கதிரைகள், கட்டில் மெத்தைகள், அல்மாரி, Steel அலமாரி Cas Cooker, புத்தக ராக்கைகள், கடை Show case மற்றும் பல உடன் விற்பனைக்கு M. தியாகராஜன் 326 பிரதான வீதி யாழ்ப்பாணம். (C6360)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001. [C6299]

நல்ல பராமரிப்பிலுள்ள 100 லவ்பேர்ட்ஸ் (கூட்டுடனும்), பொமேரியன் நாய்க்குட்டி கூட்டுடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: பரமானந்தன்,18/A.சிவகுருநாதர் வீதி. நீராவியடி, யாழ்ப்பாணம். (C 6380)

நஷனல் 20'' T V B/W சீடிக்ஸ் 12'' விற்பனைக்குண்டு தொடர்பு: அலீம், இல. 41. பாத்றோட், றெச்களாமேசன், குருநகர், யாழ்ப்பாணம். C6398

Nel Farm, Christombu Farm சேவற்குஞ்சுகள் முறையே 23ந் திகதி, 24ந் திகதி விநியோகிக்கப்படும் விலை 4/50. முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். C 6399

Broilers இறைச்சிக்கோழிக்குஞ்சுகள் (இன்று, 16-12 1986 விநியோகிக்கப்படும். Nallur Video Centre (நல்லூர் வீடியோ சென்ரர்) 19. முருகேசர் ஒழுங்கை, நல்லூர். C 6401

## விற்பனைக்கு

பெய்கண்டான் லீலா கலண்டர்கள், டயறிகள் போதிய கையிருப்பிலுண்டு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள் மொத்த வியாபாரிகள் வியாபார ஸ்தாபனத்துக்கு அன்பளிப்பாக வழங்கக்கூடிய விலாசம் அடிக்கப்படாத கலண்டர்களுமுண்டு மகிமிலன் புத்தகசாலை, 03, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C 6365)

## தேவை

கற்பூரம், மெழுகுதிரி, அப்பளம ஆகிய வேலைகளுக்கு பெண் பிள்ளைகள் தேவை நேரில் வரவும் விலாசம்: V அரியரெட்ணம்.பழைய நம் 151, புதிய நம் 345 கோவில் வீதி,நல்லூர். குறிப்பு(நல்லூர் கோவில் பின் வீதி) (C 6377)

ஒப்பந்த அடிப்படையில் பல வேலைகளையும் செய்யும் தச்சு வேலை யந்திரம் ஆசாரியுடன் தேவை 91, ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். C 6388

## வகுப்புக்கள்

Radio T V. வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், பிளம்பிங் தட்டெழுத்து-சுருக்கெழுத்து 20-12-1986ல் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது தொடர்பு: Vispa Engineering Hall, 328, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். C 6392

Spoken English with Grammar G C E (O/L) ஆங்கில வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாட்களில் ஆரம்பமாகியுள்ளன. சி சிவசக்தி B A. சிவா இன்ஸ்ரியூட், 5, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம் C 6397

TOEFL Essay Writing பயிற்சி வகுப்புக்கள் இரு மணித்தியாலம் A/L, Exam Grammar ஆரம்பம் 20-12-86. சனி, ஞாயிறு மாலை 3-5 S B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (C 6378)

## ஏல விற்பனை மரவெட்டுத் துண்டுகள்

விறகுக்காக பாவிக்கக்கூடிய மரவெட்டுத் துண்டுகள், தாதிமார் பயிற்சிக் கல்லூரி வளவில் டிசம்பர் மாதம் 20-ம் திகதி [20-12-86] காலை 10-00 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் தெரிவசெய்யப்பட்டவர் உடனடியாக யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளரிடம் பணத்தை காசாகக் கட்டி, இரண்டு நாட்களுக்குள் மரத்துண்டுகளை வெளியேற்றிவிட வேண்டும்

இம்மரத்துண்டுகளை வேலை நாட்களில் தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் பார்வையிடலாம்.

ந கனகசபை
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

[A 3326]

## சேவை

டாக்டர், இஞ்சினியர், பட்டதாரிகள் மற்றும் ஏனையோரும் திருமணம் நிச்சயிக்க உடன் தொடர்பு கொள்ளவும்! பிரபல ரேகை எண் சோதிட நிபுணர் செ நாகேந்திரராசா. 174/16 கோவில் வீதி [கைலாச பிள்ளையார் கோவிலடி] நல்லூர். [C 6305]

மணமகன் மணமகள் தேவைகளுக்கும் எப்பொருள்களானாலும் ஆதனங்களுட்பட வாங்கவும் விற்கவும். திட்டப்பரிசு விபரங்களுக்கும், எம்மை நாடுங்கள் புதியனவும் பழையனவுமாகும் நானாவித பொருள்கள் ஆதனங்களுட்பட மலிவு விற்பனைக்கிருக்கின்றன லக்கி பெனிபிட் லிமிட்டட், சந்திக்கருகாமையில் கோப்பாய். C 6394

## பயிற்சி

தொழில் பயிற்சி டிப்ளோமா வகுப்புகள் ஆரம்பம் 29-12-86 Telex Operators International, இரு பாலாரும் றேடியோ ரீ வி, எலக்றிக்கல் வயறிங் சான்றிதழ் ள் வழங்கப்படும் Electros Thirunelvely Junction. C 6369

மு. க. முத்துக்குமார்
சட்டத்தரணி
பருத்தித்துறை

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

கரவெட்டி நெல்லியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு கனகரத்தினம் என்பவரது மரணசாதனமில்லா சொத்து விடயத்தில்

- மரணமெய்தியவர் முருகேசு கனகரத்தினம் கைம்பெண் மகேஸ்வரி, நெல்லியடி, கரவெட்டி மனுதார்.

வழக்கு இலக்கம் மரணசாதன நியாயாதிக்கம் } 1192 Testy

எதிர்

1. கனகரத்தினம் மகள் சுமதி

பராயமடையாதவர்!

2 கனகரத்தினம் மகள் பாமதி

பராயமடையாத 2ம் எதிர்வாதிதனதுவழக்கு பாதுகாவலர் 3ம் எதிர்வாதி மூலமாக

3. பொன்னையா நாகலிங்கம் எல்லோரும் நெல்லியடி, கரவெட்டி.

எதிர்வாதிகள்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எனவே அக்கறை உள்ள எவரேனும் 1987ம் ஆண்டு தை மாதம் 23ம் திகதி காலை 9-30 மணிக்கு இந்நீதிமன்றில் அவ்வாறு பதியப்பட்ட பின்முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனகட்டளையாக்கப்படக்கூடாதென்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் அவற்றை தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

1986 மார்கழி 12ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி,

(ஒப்பம்)

ச. நடராசா,
பதிவாளர்.

வரைவு,
மு. க. முத்துக்குமார்,
சட்டத்தரணி

C 6384

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
திரவியம் கந்தையா

மலர்வு: 29 - 3 - 45
உதிர்வு. 16 - 12 - 82

நித்திய சுமங்கலியாய் விண்ணுலகுக்கு எம்மை விட்டுப் பிரிந்து சென்று நான்காண்டுகள் கண்ணீரில் கலந்து விட்டது அன்னைக்கோர் இலக்கணமாய் திகழ்ந்த அன்புத் தெய்வமே! உங்களின் அன்பு நினைவலைகளும் பிரிவுத்துயரும் என்றென்றும் எம்மை விட்டகலாது உங்களின் தூய ஆத்மா எங்களை வழிநடத்திச் செல்லவேண்டுகிறோம்.

கணவன்,
பிள்ளைகள்.

தம்பாலை,
அச்சுவேலி.

(C 6271)

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் மன்னார், உப்புக்குளம் காலஞ்சென்ற நூறும்மா இபுருகிமின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

— மரணமெய்திவரி மன்னார், உப்புக்குளம் இபுருகிம் றபீக்

— மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் இல T/13/86

எதிர்

மன்னார் உப்புக்குளம்

1. இபுருகி பகுமூத்
2 இபுருகிம் அன்சார்
3. இபுருகிம் ஜலாலுதீன்
4. இபுருகிம் நூறிய்யா

(3-ம், 4-ம் மைனர் பிரதிவாதிகள் சார்பாக தங்களுடைய கார்டியன் 1-ம் பிரதிவாதி]

— எதிர் மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனச் சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1987-ம் ஆண்டு தை மாதம் 6-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாகப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
(ஒப்பம்)

மு. பத்மநாதன்,
பதிவாளர்.

மன்னார்.
4-12-1986

(C6371)

## பிரிந்தவர் கூடினர்

யாழ்ப்பாணம்,செவ்.

திருமணம் முடித்து ஆறுவது மாதத்தில் வாழக்கையில் பிரிந்த தம்பதிகள் மூன்று வருடங்களின் பின்பு மீண்டும் புதிய வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

கோண்டாவில் வடக்குப் பகுதியைச்சேர்ந்த இத் தம்பதிகள் திருமணம் முடித்து ஆறுவது மாதத்திலேயே சிலபிணக்குகளின் நிமித்தம் முற்று முழுதாக பிரிந்து வாழ்ந்தார்கள். இந்நிலையில் கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் எடுத்த பெருமுயற்சியினால் இத்தம்பதிகள் தமது பழைய பிணக்குகளைத் தீர்த்துக் கொண்டதுடன், மீண்டும் இணைந்து வாழ்க்கையில் ஈடுபடலாயினர்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில்

நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை பேதுருப்பிள்ளை அல்பிரட் என்பரின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

- மரணமெய்திவர் பேதுருப்பிள்ளை அல்பிரட் கைம்பெண் மேரி றெஜினு நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை.

-மனுதார்

இல. த/112

எதிர்

1 புறுணோநோயல் அல்பிரட் நாரந்தனை மேற்கு. ஊர்காவற்றுறை தற்போது மேற்கு ஜேர்மனி.
2. அல்பிரட் யூஜீன் ராஜகுமாரி;

பராயமற்றவர்கள்

3. அல்பிரட் ஜெயதர்ஷினி
4. அல்பிரட் அலெக்ஸ் ரூம்பா எல்லோரும் நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை பராயமற்றவர்களான 3ம், 4ம் எதிர் மனுதார்கள் தமதுமைத்துனரான 5ம் எதிர் மனுதாரை வழக்குப் பாதுகாவலராக.
5. அந்தோனிப்பிள்ளை யோசேப் நூல 10 ஆசீர்வாதப்பர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம் பராயமற்ற 3ம், 4ம் எதிர்மனுதார்களின் வழக்குப் பாதுகாவலராக

- எதிர் மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தைநிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு மாசி மாதம் 11ந்திகதி முற்பகல் 9-00மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுரிகள் எதிர்மனுதார்கள் மன்றில் சமுகளிக்குமாறும் கேட்கப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ந் திகதி. ஊர்காவற்றுறை.

நீதிமன்றக்கட்டளைப்படி,
சு. வ கணேசன்,
பதிவாளர்.

வரைவு!
ச. இளங்கோவன்,
மனுதார் சட்டத்தரணி
C 6341

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கராச்சியில்நடந்த இனக்கலவரத்தில்

# 50பேர்பலி; 125பேர் காயம்!

## 350 வீடுகளும், கடைகளும் தீ வைப்பு

கராச்சி, டிச 15

பாகிஸ்தான் கராச்சி நகரில் நேற்று இடம் பெற்ற புதிய இனக்கலவரத்தில் 50 பேர்இறந்துள்ளதாகவும், 125 பேர் வரையில் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கலகக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் பிரயோகம் மேற்கொண்ட போதும் கலகக்காரர் தொடர்ந்து வன்முறைச்சம்பவங்களில் ஈடுபடவே பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இத்துப்பாக்கிச் சூட்டிலே கலகக்காரர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளனர்.

இச்சம்பவத்தின் எதிரொலியாக இதுவரையில் 350 வீடுகளுக்கும், கடைகளுக்கும் தீவைக்கப்பட்டுள்ளது

காராச்சியிலுள்ள குடியிருப்புப் பகுதியில் ஒருநாள் நடந்த வன்முறைச்சம்பவங்களை கட்டுப்படுத்தும் நோக்குடன் நான்கு மாவட்டங்களில்கால வரையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் கலகக்காரர்களை கண்ட இடத்திலே கட்டுவிடுமாறும் துருப்புக்களுக்கு ஆணையிடப் பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### உலகச் செய்திகள்

கலகங்களை அடுத்து ரோந்துப்பணி நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்காக துருப்புக்கள் கராச்சிக்கு அழைக்கப் பட்டார்கள்.

காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் பொரும்பாலானோர் துப்பாக்கிச்சூட்டினாலும் கத்திக் குத்தினாலும் காயமடைந்தவர்களாகவே காணப்பட்டனர். (ஒ)

### மீனம்பாக்கம்

## விமான நிலைய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

சென்னை, டிச 15

தமிழ்நாட்டில் கடந்த பதினைந்து நாட்களில் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்ந்துள்ள குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன

நேற்றுச் சென்னையில் வெளியிடப்பட்ட காவல்துறை பத்திரிகை குறிப்பொன்றில் தீவிரப்பாதுகாப்புநடவடிக்கையை யொட்டி மீனம்பாக்கம் விமானநிலைய ஊழியர்களும், விமானப் பயணிகளும் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### தமிழ்ப் பணிகளுக்காக

## உலகத் தமிழ் வளர்ச்சி வங்கி ஆரம்பிக்கப்படவுள்ளது

சென்னை, டிச 15

உலகத்தமிழ் சம்மேளனம் உலகத்தமிழ் வளர்ச்சிக்குவங்கியொன்றை அமைக்கவிருப்பதாகவும் இதற்கு ஆரம்பத்தில் பத்துலட்சம் பவுண் முதலீடு செய்யப்பட விருப்பதாகவும் இதன் தலைவர் டாக்டர் வி. டேவிட் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

உலகெங்கிலும் தமிழ்வளர்ச்சிப்பணிகளுக்கும் தமிழ்மொழி கலாசார மேம்பாட்டிற்கும் இந்தவங்கியின் நிதி பயன்படுத்தப்படும் என்றும் டாக்டர் டேவிட் தெரிவித்தார்.

நியூயோர்க், லண்டன், புதுடில்லி, சென்னை, சிங்கப்பூர், மொரிஸியஸ், மலேசியா ஆகிய இடங்களில் இந்த வங்கிக்கிளைகள் நிறுவப்படும் என்றும் உலகத்தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றை தென்னகத்தில் அமைக்க இந்தச்சம்மேளனம் திட்டமிட்டிருப்பதாகவும் குறைந்தது ஐம்பது சதவீத இடங்களாவது வெளிநாட்டுத் தமிழர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ)

## பொதுக் கூட்டம்

சுண்டுக்குளி, திங்கள்

நவாலி சென் பீற்றேஸ்ரோ க த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. நா யோகராசா தலைமையில் நடைபெற்றது.

### 6-வது தமிழாராய்ச்சி மாநாடு

## மே மாதம் 20-ம் திகதி கோலாலம்பூரில் ஆரம்பம்

கோலாலம்பூர், டிச 15

ஆறாவது சர்வதேச தமிழாராய்சி மாநாடு அடுத்த மே மாதம் 20ம திகதி மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் ஆரம்பமாகவுள்ளது

இந்தியா இலங்கை போன்ற நாடுகளிலிருந்து சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐந்து நாட்கள்நடைபெறும் இந்தமாநாட்டிற்கான ஏற்பாட்டை உலகத்தமிழர் சம்மேளனம் செய்துவருகிறது.

மலேசியப்பிரதமரால் ஆரம்பித்து வைக்கப்படும் இம் மாநாட்டில் தமிழகமுதல்வர் உட்பட பல்வேறு அறிஞர்கள் கலந்துகொள்வார்கள். (ஒ)

## விவசாயிகள் நிலைமை

பண்டத்தரிப்பு, திங்கள்

"மகாவலி திட்டப் பிரதேசத்திலும் இதர வெளிமாவட்டங்களிலும் வெங்காயம், மிளகாய் செய்கை அபரிதமாக செய்கைபண்ணப்படுவதால் எமது யாழ். மாவட்ட விவசாயிகள் இவற்றினால் கடந்த காலங்களைப் போல அதிக வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

## புதிய முகாமையாளர்

[வேலணை]

வேலணை ப, நோ. கூ. சங்கத்தின் புதிய பொதுமுகாமையாளராக திரு வே செல்லத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.


# கோல் 2 ஈ.

கோல் 2ஈ களைநாசினியை பாவித்து நெற்பயிரின் வளர்ச்சியை பாதிக்கும் நெற்சப்பி, கோழிச்சூடான் போன்ற சகல களைகளையும், வெங்காயம், உழுந்து போன்ற பயிர்களுடன் போட்டியிட்டு வளரும் பசளி, போன்ற சகல களைகளையும் முற்றாக அழித்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்.

கோல் 2ஈ களைகள் முளைக்க முன் கட்டுப்படுத்தும் ஒரு சிறந்த களைநாசினியாகும்.




CIC

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டேட்

த.பெ. எண் 352, கொழும்பு. 100 மி.லி. - ரூ. 80/- 200 மி.லி. - ரூ. 150/-

# RADIO, T. V. & Electronic Engineering Course

## 7 Months - Weekends

G. C. E. (O/L) பரீட்சை எழுதியவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

- ★ RADIO
- ★ T V
- ★ VIDEO TAPE RECORDER
- ★ AUDIO TAPE RECORDER
- ★ STEREIO, HI FI AMPILIFIERS
- ★ RECORD PLAYERS

மற்றும் இலத்திரினியற் கருவிகளை எமது நவீன ஆய்வுகூடத்தில் பழுதுபார்க்கும் நுட்பத்தைப் பயின்று கொள்ளலாம்.

GRANDMET

தொழிற்சாலைகளில் இலத்திரனியற் கருவிக் கட்டுப்பாட்டு [Control System] முறைகளையும், கம்பியூட்டர், கல்குலேட்டர், Electronic Organ Clocks Radio Transmitters, Electronic Typewriters போன்றவற்றின் தத்துவங்களை எமது பாடத்திட்டம் உள்ளடக்கியமையினால் வேலை வாய்ப்புகளை மிக இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.

விரிவுரைகள் லண்டன் தகைமையும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளரால் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்தப்படும். அச்சிட்ட பாடக்குறிப்புகளும் இவ்விரு மொழிகளிலும் வழங்கப்படும்.

## Fees - ரூபா 250/- வீதம் 6 மாதங்களுக்கு

வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில் ஆரம்பம் : 27-12-86 - 10 மணி.

I. C. M. A, I. D. P. M, A; A. T, I, A. B. வகுப்புக்கள் சென்ற வாரம் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மேலும் விபரங்களுக்கு:

CANTABIA INSTITUTE,
21, Main Street,
JAFFNA.

Phone : 24201. [A 3254]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாள்புறத்திலைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூறடையாமே

- மாணிக்கவாசகர்

## நமது நோக்கு

# விடுதலைப் பாதை தடைப்படலாகாது

‘அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது’ என்று பாடினார் ஔவையார். மிகச் சுவையான கூழை இவ்வித பாட்டுக்குப் பரிசாகப் பெற்றது நியாயமே.

இன்று அடிமைப்பட்ட மக்களின் உயிரை வாழவைக்கும் சூழ்கிடைக்கும் வழி விடுதலைப் போர் என்ற காலம்.

அதுவும் வருடமுடிவை நினைவூட்டும் மார்கழி மாதம இன்று பிறக்கின்றது. எடுத்த எடுப்பிலேயே சைவர்களுக்கு மகத்தான திருவாதிரையும் நிகழ்கின்றது.

ஐயா, நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் எம்மைக்காப்பாய் என்று நடராஜப் பிரபுவுக்கு நாம் வேண்டுகிறோம்

எல்லாருக்கும் நல்ல நடராஜன் இந்துக்களின்சொந்தக்காரன். இருப்பினும் எங்களை எய்யாமற் காப்பாற்றுகின்றானா?

ஔவையின் பாட்டு இவ்வாறிருக்க நாம் இன்று மனிதனாய் இறத்தல் எளிதென்ற வெறும் பாட்டைப் பாடுகின்றோம்.

பகைவரைக் கொல்ல எடுத்த துப்பாக்கி வேறெதற்கும் பயன்படுமானால் வந்த விடுதலை எந்த வழியால் திரும்பிவிடுமென்று எவரும் சொல்லமுடியாது.

பிறவித்துயர்களில் எல்லாம் துயராவது சமூகம் அடிமைப்பட்டு அல்லற்பட்டு வாழ்வது. இவ்வித துயர் ஒழியவேண்டுமென்று எங்களுக்காக தில்லைச்சிற்றம்பலத்தில் நெருப்பாட்டம் ஆடுகின்றான் நடராஜன் அதற்கொரு பிரதி உபகாரமே நாம் அவனுக்கு வழங்கும் ஆர்த்திரா அபிஷேகமும் தரிசனமாகிய உபசாரமும்.

ஆட்டத்தின் பயனை நாம் அடைந்து விடுகிறோமா. நெடுங்காலமாக இந்தநாட்டில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் புராதன பெருமையைப்பேணியதோடு இன்றைய சமுதாய அமைப்பில் மதிப்புள்ள மக்களாக வாழ முயன்றனர். அன்னியர் ஆட்சியிலும் கௌரவமான மக்கள் என்ற பெயரைப் பெற்றோம்.

சுதந்திர ஆட்சியில் படிப்படியாக நாம் ஒதுக்கப்பட்டதால் மக்கள் சுதந்திரம் பூரணப்படவில்லையென்ற கருத்தில் அதற்கு வேண்டிய சாத்வீகப்போர் மிகத் திறம்பட நடந்தது. வெற்றிக்குப்பதிலாக ஒதுக்கப்படும் திட்டம் முன்னேறிற்று.

தடுத்து நிறுத்தவும், மக்கள் இழந்த உரிமைகளை மீட்கவும் ஆயுதயுத்தம் கடமைகளில் தவிர்க்க முடியாததுஎன்றகட்டம்தானாகவே உதயமானது.

இந்த ஆயுத யுத்தம் தமிழரின் பண்பாட்டை, அவர்களுக்குரித்தான அறநெறியை உலகறியச்செய்தது பண்பாடும், அறநெறியும் யுகிதத்துக்கு மாறுபட்ட பதங்களல்ல.

‘பயங்கரவாதிகள்’ என்று இன்றும் அழைக்கப்படும் எங்கள் தமிழ் இளைஞர் மறத்தின் மகிமையை நிலைநாட்டத் தவறவில்லை

மக்களை காப்பாற்றத் தவறிய ஆட்சியை எதிர்ப்பது அறம், அந்த அறநெறியில், பகைவர் எவராயிருந்தாலும் - ஆட்சியைத் தானும் எதிர்த்துப் போராடுவது அறம்.

தமிழ் இளைஞர்கள் இதனை எவ்வாறு நிறைவேற்றுகின்றனர்; தங்கள் உயிரைத் தியாகம்செய்து இந்தச் சமுதாயத்தை பேணவேண்டுமென்ற நோக்கம், ‘சயனைட்’ என்ற போர்முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது.

இத்தகையவீரரை தோற்கடிப்பது முடியாத காரியம் என்று அஞ்சிய அரசு உலகனைத்தையும் உதவிதேடிச் சென்றது. இன்று வாஷிங்டனில் கருத்தரங்கு நடத்துகிறது.

இந்த அற்புதமான திருப்பம் முற்றுக முன்னரே கண்ணூறு நிழ்ந்திருக்கிறது அடித்துச்சொன்ன பல்லி, போராடும் குழுவினருக்குள்ளே குரோதம் என்ற பலனைக் குறித்தது.

நடராஜப் பிரபுவின் ஆட்டம், எங்கள் மாறுட்டத் திற்கு உதவாது. பித்தந் தெளிய மருந்து ஒன்றிருக்கிறது மெய் அதனை நாம் சிதம்பரத்தில் பெறலாம்.

சிதம்பரம், என்றால் தமிழ்நாடு செல்லவேண்டிய நிர்ப்பந்தம் இருக்க வேண்டியதில்லை அங்கும் குழப்பமும் கலவரமும் அதிகம்.

இங்கிருந்தே சிதம்பரத்தைக் காணலாம் என்கிறார் ‘சிவநடனம்’ என்ற இலங்கு நூலை உலகுக்குதவிய கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி.

இதயநோய் மலிந்த இக்காலத்தில் ஆன்மீகத்தின் பிறப்பிடமாகிய ‘இதயத்தில் நடராஜன் ஆட்டம் இடைவிடாது நடைபெறுகின்றது’ என்கிறார் கலாயோகி.

தமிழர் சுதந்திரப் போராட்டம் நிச்சயம் வெற்றியில் முடிவதற்கு தமிழ் மறை என்ன சொல்கின்றது?

பேராண்மை
என்பதறுகண் ஒன்று
உற்றக்கால்
ஊராண்மை மற்றதன்
எஃகு.

‘இராமன் இன்றுபோய் நாளை வா’ என்ற மறத்தின் அறம் இன்று எமக்கு அருமருந்தென அறிக.

# இனப்பிரச்னை தீர்வுக்கு முட்டுக்கட்டை எது?

**“இனப்பிரச்னை தீர்வுக்கு வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு கோரிக்கையல்ல, இருக்கும் இணைப்பைகூறுபோட முற்படுவதே முட்டுக்கட்டையாக இருக்கின்றது.”**

வடக்குக் கிழக்கு மகாணங்களை இணைக்கும்படி விடுக்கப்படும் கோரிக்கைதான் இனப்பிரச்னைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இருந்துவருவதாகக் கூறப்படுவது வெறும் கட்டுக்கதை.

வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கும் பகுதிகள் பூகோள ரீதியில் ஒன்றோடொன்று ஒட்டியவை. ஒரே இயல்புகளைக் கொண்ட மக்களைக்கொண்டவை அந்த வகையில் அப்பகுதிகள் முழுமையான தனிப்பிரதேசமாக விளங்குபவை

இத் தனிப் பிரதேசத்தை வடக்குகிழக்கு மாகாணங்களாக பிரித்து ஆண்ட கைங்கரியம் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளருக்குரியது இந்த நாட்டில் மேற்கூறிய முழுப் பிரதேசத்தையும் ஒரு சமஷ்டி அமைப்பின்கீழ் தமிழ்மொழி மாநிலமாக உருவாக்கவேண்டும் என்பதே சுதந்திரகாலத்திலிருந்து தமிழ் மக்களின் கோரிக்கையாக இருந்துவருகின்றது. இந்தநோக்கத்தை அடைவதற்காக தமிழ் மக்கள் பிரதிநிதிகளால் சாத்வீக முறையிலும் அமைதிமுறையிலும் 1976ம் ஆண்டுவரை 20 வருடங்களுக்குமேலாக எடுக்கப்பட்ட முயற்சிகளியாவும் வியர்த்தமாகின. மாறாக, அடக்கப்படுதலும், ஒடுக்கப்படுதலும், நசுக்கப்படுதலும், பாரபட்சமும், ஏமாற்றுதலுமே அவர்களுக்கு கிடைக்கலாயின மிகுந்த வெறுப்புக்குள்ளான நிலையில் 1976ம் ஆண்டில் வட்டுக்கோட்டை மகாநாட்டில் ‘தமிழ் ஈழ’ தனிநாட்டை உருவாக்குவதற்கான இயக்கத்தில் அதுவும் சாத்வீகமுறையில் ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டது. இந்த முயற்சி சரியான பயனளிக்காமையால் தான் இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இந்தப் போராட்டம் கடந்தபத்துவருடகாலமாக நடைபெற்றுவருகின்றது இதன் விளைவாக சிவில் நிர்வாக நெருக்கடிகளும் இரத்தக்களரிகளும், படுகொலைகளும், பொருள் அழிப்புக்களும் பொருளாதார வீழ்ச்சியும், உலகக்கண்ணில் இலங்கைக்கு அபகீர்த்தியும் ஏற்பட்டுவருகின்றன.

இந்தியாவின் நட்புரீதியான தலையீட்டையடுத்து இலங்கை ஜனாதிபதி பெரும் இழுத்தடிப்புகளின் பின்னர் ஏறகனவே பூகோளரீதியில் ஒன்றாகவும் மக்கள் இயல்புகளில் ஒற்றைசீராகவும் இருந்த தமிழர் தாயகத்தை பிரிட்டிஷாரின் காலனித்துவ நிர்வாகம் உருவாக்கிய எல்லைக்கோட்டின் அடிப்படையில் இரண்டு மாகாணங்களையும் தமிழருக்கு பிரித்து வழங்குவதற்கான யோசனையை முன்வைத்துள்ளார். இந்த கூறுபோடுதலை த.வி. கூட்டணி கடுமையாக எதிர்த்துள்ளதுடன் இனப்பிரச்னைக்கான தீர்வு என்றமுறையில் தமிழர்தாயகத்தின் ஒருமைப்பாடுசீர்குலைக்கப்படலாகாதெனவும் கண்டிப்புடன் தெரிவித்துள்ளது.

### இயற்கையும் செயற்கையும்

தமிழ் மக்களின்பாரம் பரிய தாயகத்தின் ஒருமைப்பாடானது பூகோள ரீதியாயும், இன ரீதியாகவும் அசைக்க முடியாத சிறப்பியல்புகளினால் நினைவுக்கெட்டாதகாலம் முதல் பிணைக்கப்பட்டுள்ளது அதேசமயம் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்படும் இரட்டைத் தன்மையானது செயற்கையான பிரிவினை கோட்டின் வாயிலாக உருவாக்கப்பட்டதாகும்.

எனவே பாரம்பரிய தமிழர் தாயகத்தின் ஒருமைத்தன்மையானது எப்போதும்போலவே இருத்தல் வேண்டும் என்ற தமிழர்களின் அபிலாஷை இயற்கையானதும் வழமையானதுமாகும். அதனைச் செயற்கை முறையில் பிரிப்பதானது வழமைக்கு மாறானதும் தலையீடு செய்வதுமாகும். எனவே அரசியல் தீர்வு காண்பதில் இருக்கும் முட்டுக்கட்டை இரு மாகாணங்களையும் இணைக்கக் கோருவதில் அல்ல இரண்டாகப் பிரிக்க முனைவதிலேயே காணப்படுகிறது என்பதே உண்மை நிலை.

கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது தமிழர்கள் சிறுபான்மையாகவுள்ளனர் என்றும் சிங்களவர்களும், முஸ்லிம்களும 60 வீதமாகவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படும் கருத்தானது இணைப்புக் கோரிக்கைக்கு எதிர்வாதமாக முன் வைக்கப்பட்டபோதிலும் அப்பிரதேசத்தைக் கூறுபோடுவதற்கு ஆதாரமாக வைக்கப்படும் கருத்தே. அதுவும்கூட நிலைநாட்டமுடியாத வாதம்.

தமிழர்களைப் போலவே முஸ்லிம்களின் கல்வி, வியாபாரம், தொழில், நீதிவிசாரணைகள் மற்றும் சமய கலாசார சகல விடயங்களுக்கும் தமிழ்மொழியே பயன்படுகின்றது சமயத்தால் அவர்கள் இஸ்லாமியர் இந்த வித்தியாசம் அவர்களைத் தமிழர்களுடன் இணைந்து வாழ்வதற்கு எதிரான பெருங்காரணியாக இருக்கமுடியாது. தமிழ்மக்கள் தாமே இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க மதங்களைப் பின்பற்றுகிறவர்களாக இருந்து வருகிறார்கள்.

### திருகுதாளம்

கிழக்கு மாகாணத்தில் மக்கள் தொகை விகிதாசாரத்தை [illegible]கத்தில் வெளியாகியுள்ள மதிப்பீட்டு அட்டவணையில் காணலாம்.

1967ல் மட்டக்களப்பு திருகோணமலைப் பகுதியில் 32 வீதமாக இருந்த முஸ்லிம் மக்கள் தொகை இப்பொழுது தமிழருக்கு எதிராகக் காட்டப்படும் 60 வீதத்தில் குறைத்து மதிப்பிட்டுக் காட்டப்படுகிறது. சிங்கள மக்கள் தொகை அதில் 28 வீதமாகக் குறைவதைக் காணலாம்.

சி. எஸ். செபரட்ணம்

அதே போல் 1921ல் 4. 49 வீதமாக இருந்த சிங்களவர் எண்ணிக்கை 1976ல் 28 வீதமாக எவ்வாறு அதிகரித்தது?

தமிழ்பேசும் மக்களின் அரசியல் சக்தியைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்க ஆதரவிலான குடியேற்றங்கள் மூலம் பல வருடகாலமாக இது அதிகரிக்கப்பட்டுவந்துள்ளது.

மேற்குறித்த அரசுதரப்பு வாதத்தில் ‘தற்பொழுது’ என்று குறிப்பிடப்பட்டுள்ள வாசகமே இந்தத் திருகுதாளம் கடந்த பல வருடங்களாக

| | சிங்கள. | இல. தமிழர் | முஸ். | இந். தமிழர் |
|---|---|---|---|---|
| **1921** | | | | |
| திருமலை. | 4.4 | 53.2 | 37.1 | 13 0 |
| மட்டக். | 4.59 | 52.8 | 36.6 | 0 58 |
| **1946** | | | | |
| திருமலை | 20 7 | 40.1 | 29 2 | 4 4 |
| மட்டக். | 5.9 | 49.7 | 42 0 | 0 59 |
| **1971** | | | | |
| திருமலை. | 28 81 | 35 2 | 31.6 | 3.0 |
| மட்டக். | 17 6 | 44 9 | 34.6 | 2.2 |
| **1976** | | | | |
| திருமலை. | 31 6 | 32 8 | 32.2 | 3.1 |
| மட்டக். | 26 5 | 40 2 | 32.0 | 2.0 |

நடைபெற்று வந்துள்ளது என்பதை ஒப்புக்கொள்வதாகும்.

### கொம்பு திருவிகள்

இது எப்படி இருக்கிறது என்றால், ஒரு கிராமத்தில் ஒருவன் எருது ஒன்றைத் திருடிவிட்டான் எருதுச் சொந்தக்காரன் விதானையிடம் முறையிட்டான். விசாரணைக்கு எருதும் வந்தது அதைத் திருடியவன் அதன் கொம்புகளை ஏதோ விதமாக வால்பக்கமாகத் திருப்பிவிட்டிருந்தானும். எருது தன்னுடையது என்று காட்டுவதற்காக.

இதனால் அந்தக் கிராமத்தவர்கள் இன்றும்கூட ‘‘கொம்பு திருவிகள்’’ என்ற பட்டப் பெயருடன் அழைக்கப்படுகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் மக்கள் பரம்பல் விகிதாசாரத்தை இவ்வாறு மாற்றி அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளபோதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் தான் என்பதை நிலைநிறுத்துவதற்கான ஆதாரங்கள் பலவுண்டு,

(மிகுதி நாளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒரு புலி மரணமடைந்தால் 10புலிகள் தோன்றுகிறார்கள்"

## விக்டர் தூபி திறப்புவிழாவில் கிட்டு

(பருத்தித்துறை)

"இன்று இந்திய அரசாங்கம் சம்கூட இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குமே சமாதானப் பேச்சுவார்த்தை என்பதை உணர்ந்துவிட்டது. எனவேதான் இந்திய அரசு சார்க் மாநாட்டின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை அழைத்து மாகாண சபையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டது. ஆனால் தமிழீழத் தாயகமே இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டுவரும் பிரபாகரன் அதை மறுத்துவிட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் முடிந்த முடிவான தமிழீழ இலட்சியத்திலிருந்து விலகிவிடமாட்டாது".

இவ்வாறு பருத்தித்துறையில் நடைபெற்ற விக்டர் நினைவுத் தூபி திறப்பு விழாவிலும் 60-வது நாள் நினைவஞ்சலியிலும் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க யாழ் மாவட்டப் பொறுப்பாளர் - தளபதி கிட்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்திற்கு பருத்தித்துறை-புலோலி தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் திரு எஸ். கணேசமூர்த்தி தலைமைதாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு கிட்டு குறிப்பிட்டதாவது:-

"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும்போது தங்களைத் தமிழீழ மண்ணிற்கே அர்ப்பணித்து மரணத்தை எதிர்பார்த்துப் போராடுகின்றார்கள். இதுவரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தினால் 3?2 தமிழீழ விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்திருக்கின்றார்கள். ஒருவிடுதலைப் புலி வீரமரணமடையும்போது அந்த இடத்தை ஈடுசெய்ய 10 விடுதலைப் புலிகள் உருவாகின்றார்கள்.

தமிழீழவிடுதலைப் போராட்டத்திற்கு தமிழீழவிடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடவேண்டும். அல்லது தாங்களாகவே கலைந்துவிடவேண்டும் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்க்கவேண்டும் இவைகள் எதுவும் சாத்தியப்படாத பட்சத்திலேயே தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்குமிடையேயான இடைவெளியை ஏற்படுத்தமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இதில் தோல்வியே கிடைத்துவருகின்றது

"அடுத்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் ஸ்ரீலங்கா அரசு, அல்லது இந்திய அரசு தமது முடிவுகளை எங்களை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தலாம், அதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்காஅரசின் மும்முனைத் தாக்குதல்களும் இடம் பெறலாம். ஆனால் அவற்றினை நாம் எதிர்த்துப் போராட வேண்டும். பொதுமக்களுக்கு வேண்டிய பாதுகாப்புப் பயிற்சிகளையும் எமது இயக்கம் வழங்கி வருகிறது."

---

## உரிமை கோரப்படாத நிலையில் சடலம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ் வைத்தியசாலை 20ம் வாட்டில் கடந்த முதலாம் திகதி ஏற்புவலி காரணமாக அனுமதிக்கப்பட்ட எஸ் செல்லத்துரை (வயது 75) என்பவர் கடந்த 13ம் திகதி இறந்துவிட்டார். எனினும் அவரது சடலத்தை இது வரை எவரும் உரிமை கோரவில்லை.

இவரை அனுமதித்தவர் தமது விலாசத்தை எஸ். சுந்தரம் சண்டிலிப்பாய் சங்கானை என கொடுத்திருந்த போதும் இதுவரையில் அவர்கள் எவரும் சடலத்தை ஏற்க வரவில்லை.

இது தொடர்பான விபரங்களுக்கு யாழ் வைத்தியசாலை பொலிஸ் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (சி)

---

## ஓவியவகுப்புக்கள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ் மாவட்ட கலாசார பேரவையின் ஓவியர்க்கு நடாத்தவிருக்கும் ஓவியபயிற்சி வகுப்பு விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

ஓவியம் பயில விரும்பும் மாணவர்களும், ஆர்வமுள்ளவர்களும் யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத்தெரு 111ம் இலக்கத்திலுள்ள ஓவிய கலாநிலையத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஓவியப் பயிற்சி பெறுபவர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

**லிடோ**

10-30, 2-30, 4-30, 6-30

கார்த்திக் -ராதிகா நடித்த

**கிழக்கே போகும் ரயில்**

கலர் (புதிய பிரதி)

புதிய வெளியீடு

**வெலிங்டன்** திரையில்

10-30, 2-30, 4.30, 6-30

ஆண்களை காதல் லீலைகளில் ஈடுபடுத்தி நினைத்ததை முடிப்பதில் அவள் வல்லவள். மயிர்கூச்செறியும் சண்டைகள் நிறைந்த

Samantha Fox in

TOO HOT TO HANDLE

Action, Thrill, Sex

(Strictly Adults only)

---

## பயன் தரும் மரங்கள்

வல்வெட்டித்துறை, திங்

வல்வைப் பகுதியில் பயன்தரு மரம் நடுகைவடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு வைவேலும்மயிலுவினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

---

## வீடமைப்பு கடன்கள்

பருத்தித்துறை திங்கள்

ஐக்கிய நாணய சங்கங்கள் மூலம் வீடமைப்புக் கடன் வழங்கல் சம்பந்தமான கூட்டமொன்று புலோலி ப. நோ. கூ. சங்க அலுவலகத்தில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வைவேலும்மயிலும் தலைமையில் நடைபெற்றது.

---

## திட்டங்களை பார்வையிட்டனர்

வல்வெட்டித்துறை திங்கள்

வல்வைபிரதானவீதி தெருக்கள், வடிகால்கள், வல்வைச் சந்தி புனரமைக்கப்படவுள்ள வேலைத்திட்டங்களை உள்ளூராட்சி யாழ் பிரதேச திணைக்கள அதிகாரிகள், பெருந்தெருக்கள் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

---

## ரோந்து குறைவு

மட்டக்களப்பு, திங்கள்

மட்டக்களப்புப் பகுதியில் ராணுவ, அதிரடிப்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் நேற்று குறைவாகவே காணப்பட்டன.

### அக்கறைப்பற்றில்

அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் தேடுதலில் ஈடுபட்ட படையினர் சுமார் 40 பேர்வரை கைது செய்து முகாம் கொண்டு சென்றபின்னர் இவர்களின் ஏழுபேரைத் தவிர ஏனையோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (கூ-ஊ)

---



## பதவி உயர்வு

யாழ் நல்லூர் சென்ஜோன் அம்புலன்ஸ் படை அத்தியட்சகராக கடமை ஆற்றிவந்த எஸ். செல்வரஞ்சன் சர்வதேச சென்ஜோன் அம்புலன்சின் கிளை தாபனமாகிய சிறிலங்கா சென்ஜோன் அம்புலன்ஸ் தளபதியும் ஆணையாளருமாகிய ஜி ஏ பியதாசவினால் அண்மையில் மாகாண நிறைவேற்று உத்தியோகத்தராக (நிர்வாக) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ் நல்லூர் படை அத்தியட்சகராக கடமையாற்றிய காலத்தில் அப்பிரிவிற்கு உட்பட்ட சகல கிளை பிரிவுகளுக்கும் நவீன முதலுதவி பெட்டிகளை 15,500/- செலவில் யாழ். இந்து கல்லூரி கொக்குவில் இந்துக்கல்லூரி உட்பட 12 பிரிவுகளுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இவர் அண்மையில் யாழ். படை அத்தியட்சகர் பிரிவுகளுக்குள்ள சகல உத்தியோகத்தர்களும் பங்குபற்றிய கூட்டத்தில் கடந்த ஆண்டுகளில் யாழ். படை அத்தியட்சகராக இருந்தபோது அப்பகுதி எவ்வளவு முன்னேற்றம் அடைந்ததோ அதேபோன்று மாகாணரீதியாக யாழ்ப்பிரதேசம் கிளிநொச்சிபிரதேசம், வவனியா பிரதேசம், முல்லைத்தீவுபிரதேசம், மன்னார் பிரதேசம் ஆகியபிரதேசங்களுக்கு சென்று அரசாங்க நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், பாடசாலைகள் போன்ற பொது ஸ்தாபனங்கள் ஆகிய பிரிவுகளுக்கு சென்ஜோன் அம்புலன்ஸ் பற்றிய விளக்கமும் முதலுதவி பற்றிய விளக்கமும் அளிப்பதாகவும் அப்பகுதிகளில் அதை நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்துள்ளார் 1987 ஆம் ஆண்டு தற்போது நடைமுறையிலிருந்து வரும் வீட்டுக்கொரு முதலுதவியாளர் என்னும் திட்டத்தினை நிறைவேற்றவும் தீர்மானித்துள்ளார்.

---

# ஆலய பூசகர்களுக்கு சிங்களத்தில் கடிதம்!

கொழும்பு திங்

சைவ ஆலயம் குறித்த விடயத்தில் அரசாங்கத்தால் அனுப்பட்டுள்ள தனிச் சிங்களத்திலான சுற்றறிக்கைத் தொடர்பாக ஆலயப் பூசகர்கள் தமது கடும் ஆட்சேபத்தினை தெரிவித்துள்ளார்கள்.

1987-ம் ஆண்டை சர்வதேச வீடமைப்பு ஆண்டாக அரசாங்கம் பிரகடனப் படுத்தியுள்ளது இது தொடர்பாக சகல இந்து ஆலயங்களிலும் பூசை நடத்தப்படவேண்டும் என்று சகல அரசாங்க அதிபர்களுக்கும் தனிச்சிங்களத்திலான சுற்று நிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது குறித்தே மேற்படி சைவஆலயங்களின் பூசகர்கள் தமது கடும் ஆட்சேபத்தினை தெரிவித்துள்ளார்கள். (ரா)

---

## ஜனவரிமுதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னையில் ஓய்வுபெற்ற உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவிருப்பதாகவும் தெரிய வருகின்றதென அச்சிங்களப் பத்திரிகை மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

---

## தலைமன்னார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பகுதியிற் சென்றுகொண்டிருந்த ஒரு இயந்திரப் படகை நோக்கிக் கடற்படையினர் பீரங்கியால் சுட்டனர், அப்பொழுது இயந்திரப் படகிலிருந்த போராளிகளும் கடற்படையினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டே தப்பிச் சென்று விட்டனராம்

இதனைத் தொடர்ந்து காலை 11 மணியளவில் கடற்படையினர் படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த கடற்றொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் இதில் ஐந்து மீனவர்கள் பலியானார்கள்; இருவர் படுகாயமுற்றனர். ஏனையோர் நிலைபற்றி எதுவும் தெரியவில்லை

இச்சம்பவத்தினால் இப்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோர் மத்தியில் அச்சநிலை தோன்றியுள்ளது. (மா)

---

## கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஜனாதிபதி ஜயவர்த்தனவிடம் இவர்கள் சமர்ப்பிப்பர் என ராஜதந்திரவட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

இலங்கை அரசு தனது மாகாணசபை யோசனையில் வடக்கு மாகாணத்துக்கு ஒரு மாகாண சபையும் கிழக்கு மாகாணத்தில் வாழும் மூன்று இனமக்களுக்கென மாகாணசபைகளும் வழங்க முன்வந்திருந்தது.

இக் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்ப்பகுதிகளை உள்ளடக்கி நிறுவப்படவுள்ள மாகாணசபையின் எல்லையில் சிறு மாற்றங்களை இந்திய தரப்பு செய்திருப்பதாக தெரியவருகிறது.

அத்துடன் வடக்கு மாகாண சபையும் கிழக்கின் தமிழ் மாகாணசபையும் நேரடியாக பௌதீக ரீதியாக அல்லாமல் மறைமுகமாக ஒன்றுபட இணைக்கவும் சிதம்பரம் குழுவின் புதிய பிரேரணைகளில் யோசனைகள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கூ-ஊ)

---

## ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சனைக்குரிய தீர்வு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமையும் அதேவேளை, இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதிக்காத வகையிலும் பெரும்பான்மை இனத்தவரைப் பாதிக்காத வகையிலும் அமைவதில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது என்பதை இச்சந்திப்பின்போது டிக்ஸிற் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். (ஊ)

---

## சென்னையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜி. இராமச்சந்திரன், அகில இந்திய காங்கிரஸ் (ஐ) கட்சிப் பொதுச் செயலாளர் திரு ஜி. கே. மூப்பனார், தமிழ் நாடு உணவுத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

### எம்.ஜி.ஆருடன் தனியாகப் பேச்சு

நேற்று முன்தினம் இரவு தமிழகம் வந்த இந்திய மத்திய இணை அமைச்சர்கள் குழு, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களையும், போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளையும் சந்திக்க முன் நேற்றுக்காலை தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரனை தனியாக சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

கூட்டணித்தலைவர்களுடனும் போராளிக் குழுக்களுடனும் நேற்றுக்காலை இடம்பெற்ற பேச்சுவார்த்தை மாலை வரை நீடிக்குமென சென்னையில் அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

### இன்று டில்லிக்கு

இப் பேச்சுவார்த்தைகளை அடுத்து மத்திய இணை அமைச்சர்குழு இன்று டில்லிசென்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்த பின்னர் அன்றைய தினம் மாலையே கொழும்பு செல்லும் எனத் தெரிகிறது.

கொழும்பு செல்லும்வழியில் இக்குழுமீண்டும்தமிழகம்வரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (வா)

---

## அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி தமது அமெரிக்க விஜயத்தைமுடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியவுடன் ரூபவாஹினிக்களித்த பேட்டியின் போது கூறினார்.

இலங்கையில் கைதிகள் காணாமற் போவது பற்றி சர்வதேச மன்னிப்புச்சபை விடுத்துள்ள அறிக்கை பற்றி அமெரிக்காவில் என்ன கருத்து நிலவுகிறது? எனக் கேட்டபோது அதற்கு அமைச்சர் இவ்வறிக்கையை அமெரிக்கா வரவேற்ற போதும் தகவல்களும், நிரூபணங்களும் போதுமானவையாக இல்லை என அங்கு உணரப்பட்டிருப்பதாகக் கூறினார் இச்சபையிடம் சாட்சியமளித்தவர்கள் இலங்கை நீதி மன்றமொன்றிலும் முறைப்பாடு செய்திருக்கவேண்டும் என்பதே இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஊ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37 வருட சேவை



கிரிமலைக் கேணியின் பாதுகாவலராக 37 வருடங்கள் சேவை புரிந்த கதிர்காமு சின்னத்துரை ஓய்வு பெற்றிருக்கிறார் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த இவர் தமது அயரா உழைப்பாலும் நேர்மையாலும் பொது சன சேவையாலும் எல்லோரின் பாராட்டுக்கும் உரியவர் ஆனார்.

இவர் பணி புரிந்த காலத்தில் கீரிமலைக் கேணியையும் அதன் சூழலையும் மிகவும் துப்பரவாக வைத்திருந்தார். கேணியில் நீராடுபவர்கள் மிகவும் பாதுகாப்புடனும் வசதியுடனும் வந்து போக உதவியாக இருந்தார்.

37 வருட காலத்தில் கீரிமலைக் கேணியில் நீராடியவர்கள் தவறவிட்ட எத்தனையோ சங்கிலிகள், காப்புகள், தாலிக்கொடிகள் இவரால் தேடி எடுக்கப்பட்டுப் பின் ஒப்படைக்கப்பட்டன. இவருடைய இந்த நேர்மையைத் தந்தை செல்வா பகிரங்கமாகப் பாராட்டினார்.

இவருடைய பொதுச்சேவை மனப்பான்மை காரணமாக இவருக்கு உள்ளூரிலும் வெளியூரிலும் வெளிநாடுகளிலும் பல நண்பர்கள் இருக்கிறார்கள்.

-குமார்.

## மரம் நாட்டும் விழா

மாவிட்டபுரம், திங்கள்

எமது தமிழ்ப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குளங்கள் இருக்கின்றன. இக்குளங்களை சீரமைப்பேணிப் பாதுகாப்பது அவசியம்.

இவ்வாறு ஊரெழு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவில் இடம்பெற்ற மரம்நாட்டு விழாவில் கலந்துரையாற்றிய தொழிலதிபர் க. கனகராசா கூறினார்.

பயிர்செய்கை உத்தியோகத்தர் திரு. சி சக்திகிரீவன் தலைமையில் ஊரெழு கணேசா வித்தியாசாலையில் இவ்விழா நடைபெற்றது.

## மா இறக்கும் வேலைகள்

சுண்டுக்குளி திங்கள்

திருகோணமலையில் இருந்து 950 தொன் மாவுடன் வந்த ''மதிதற'' என்னும் கப்பலில் இருந்து இறக்குமதி வேலைகள் நடைபெறுகின்றன.

கடந்த வாரம் காங்கேசன் துறைமுகத்திற்கு வந்த இக்கப்பலுக்கு இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படாததாலேயே இங்கு தரித்து நின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சாட்சியங்களில் முரண்பாடு; வழக்குத் தள்ளுபடி

பண்டத்தரிப்பு திங்.

இரவு வேளையில் தாம் வீட்டில் நித்திரையாயிருந்த போது இளைஞர் ஒருவர் தம்மை மானபங்கப்படுத்தியதாகச் சண்டிலிப்பாயைச் சேர்ந்த யுவதி ஒருவர் செய்த முறைப்பாட்டை விசாரணை செய்த மாதகல் தமிழ்ழ இராணுவ நீதிச்சபை சாட்சியங்கள் முரண்பாடு காரணமாக வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியது.

இந்த வழக்கு விசாரணையின்போது பிரஸ்தாப யுவதியின் தாயார் மற்றும் சம்பந்தப்பட்ட இளைஞர் ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டு நீண்ட நேரமாக விசாரிக்கப்பட்டனர்

பிரஸ்தாப யுவதி தமது முறைப்பாட்டில் கொடுத்திருந்த விபரங்களுக்கும் சாட்சியமளித்தபோது தெரிவித்த விபரங்களுக்கும் முரண்பாடு இருந்ததாலும், குற்றத்தை நிரூபிக்கக்கூடிய சாட்சியங்கள் இல்லாமையாலும் நீதிச்சபை இந்த வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியது.

# இன்றைய பலன்

மாதம்:- கார்த்திகை
திகதி:- 30 (16-11-86)
நட்சத்திரம்:- மிருகசீரிடம்
திதி: பூரணை
கிழமை:- செவ்வாய்

மேடம்: போதுமென்ற மனதுடன் செயலாற்றுவீர்கள். நினைத்த காரிய வெற்றியுண்டு வ விலும் திருட தியுண்டு.

இடபம்:- மனதில் விரக்தி நிலை தென்படும். எண்ணிய விவகாரத்தில் தடைகள் தோன்றும் தொழில் கேடும் விளையும்.

மிதுனம்:- உடல் நலமும் பாதிக்கப்படலாம் ஏமாற்றம் தாக்கும். எதிலும் முன்னெச்சரிக்கை விரும்பத்தக்கது

கடகம்:- நீண்டநாள் கடன் ஒன்று நிவர்த்தியாகும். காதலர்கள் வாழ்விலும் நற்செய்திக்கிடமுண்டு கடமையிலும் கண்ணியம் பிறக்கும்.

சிம்மம்:- இதயத்தில் எரிமலைகுமுறும் உகவீட்டிலேயே உபத்திரவங்கள் உருவாகும். நம்பிக்கை மோசடியும் நடக்கலாம்.

கன்னி:- தாய்வழி மூலம் தனவரவுமுண்டு. சிலருக்கு உத்தியோக உயர்வுக்கும் வழிகோலப்படலாம் பரோபகாரசிந்தையும் மேலிடும்.

துலாம்:- உறவினர் வருகை உவகை தரும் அதிகாரிகளின் தொடர்பும் உண்டு டாக்டர்களுக்கும் சிறப்பான தினம்.

விருச்சிகம்:- வீண் செலவும் ஏற்படும். தொழிலிலும் தொல்லைகள் தோன்றும். குடும்பத்திலும் பொறுமையுடன் நடக்கவும்.

தனு:- கணவன் மனைவி உறவு சுமுகமாகவிருக்கும். கடையிலும் ஆர்வம் காட்டுவீர்கள். வெளியிடத் தொடர்பும் பெருகும்.

மகரம்:- போக்குவரத்து விடயத்தில் அவதானம்செலுத்தவும் துன்பத்தின் ரேகைகள்

(7-ம் பக்கம் பார்க்க)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில்

புளியங்கூடல் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இராமலிங்கம் பாலசுப்பிரமணியம் என்பவரின் மரணசாதனமற்றமரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

-மரணமெய்தியவர்.

இல. த/113

இராமலிங்கம் பாலசுப்பிரமணியம் கைம்பெண் சரோஜா, புளியங்கூடல், ஊர்காவற்றுறை

-மனுதார்.

எதிராக

பராயமற்றவர்கள்:

1. பாலசுப்பிரமணியம் மகள் யாமினி
2. பாலசுப்பிரமணியம் பாஸ்கரன்
3. பாலசுப்பிரமணியம் மகள் பத்மினி
4. பாலசுப்பிரமணியம் சசிகரன்

எல்லோரும் புளியங்கூடல் ஊர்காவற்றுறை

5. இராமலிங்கம் சோமசுந்தரம், வேலணை மேற்கு, வேலணை

இவர் 1 முதல் 4 வரையிலான பராயமற்ற எதிர் மனுதார்களின் வழக்குப் பாதுகாவலராக.

-எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட தத்துவ வழக்கு, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு மாசி மாதம் 11ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறும் பராயமற்ற எதிர்மனுதார்களையும் அவர்களின் வழக்குப் பாதுகாவலரான 5ம் எதிர் மனுதாரையும் அன்றைய தினம் இந்நீதிமன்றில் தோன்றுமாறும் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ம் திகதி, ஊர்காவற்றுறை.

நீதிமன்றக்கட்டளைப்படி

சு. வ. கணேசன்,
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
ஊர்காவற்றுறை

வரைவு:
ச. இளங்கோவன்,
மனுதார் சட்டத்தரணி.
(C-6329)

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில்

புங்குடுதீவுகிழக்கு புங்குடுதீவு கணபதிப்பிள்ளை தம்பையாவின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

மரணமெய்தியவர்.

வழ. இல: த/111

கணபதிப்பிள்ளை தம்பையா கைம்பெண் அன்னம்மா, புங்குடுதீவு, கிழக்கு, புங்குடுதீவு

மனுதார்.

எதிர்

1. தம்பையா பிரேமானந்தன், புங்குடுதீவு கிழக்கு, புங்குடுதீவு, தற்போது செல்டாகுநலா, 8873. ஆம்டென், சுவிற்சர்லாந்து.

பராயமற்றவர்கள்:

2. தம்பையா விஜயானந்தி
3. தம்பையா நிததியானந்தன்
4. தம்பையா சுபானந்தி
5. தம்பையா சிறிகுகானந்தன்
6. தம்பையா சுசியானந்தி
7. தம்பையா சிவானந்தன்
8. தம்பையா துசானந்தி

இவர்கள் பராயமற்றவர்கள் இவர்கள் தங்கள் வழக்குப் பாதுகாவலரான 9ம் எதிர்மனுதார் மூலம்.

9. கணபதிப்பிள்ளை விசுவலிங்கம், புங்குடுதீவு, 7ம் வட்டாரம்

இவர் 2 முதல் 8 வரையிலான பராயமற்ற எதிர் மனுதார்களின் வழக்குப் பாதுகாவலராக.

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு. அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு தைமாதம் 7ந்திகதி முற்பகல் 9-00மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள். எதிர் மனுதார்கள் மன்றில் சமுகமளிக்குமாறும் கேட்கப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ந் திகதி, ஊர்காவற்றுறை

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்,
பதிவாளர்,

வரைவு:
ச. இளங்கோவன்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 6330)

ANTON

பீவீசீ குழாய்கள், இணைப்புகள் புதிய விலைப் பட்டியல்

எங்கள் வாடிக்கையாளரின் நலன் கருதிப் புதுப்பித்த விலைப் பட்டியலைப் பின் வருமாறு அறியத் தருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்:

மீட்டர் வீதம் குழாய்கள்

| அளவுகள் | மாதிரி 1000 | மாதிரி 600 | மாதிரி 400 | மாதிரி 250 |
|---|---|---|---|---|
| 20மி. மீ. ($\frac{1}{2}$'') | 6/40 | - | - | - |
| 25மி. மீ. ($\frac{3}{4}$'') | 8/45 | - | - | - |
| 32மி. மீ. (1'') | 10/80 | 8/95 | - | - |
| 40மி. மீ. ($1\frac{1}{4}$'') | 18/30 | 13/85 | - | - |
| 50மி. மீ. ($1\frac{1}{2}$'') | 28/95 | 18/55 | 13/90 | - |
| 63மி. மீ. (2'') | 41/35 | 29/70 | 22/10 | - |
| 75மி. மீ. ($2\frac{1}{2}$'') | 55/60 | 45/40 | 33/10 | - |
| 90மி. மீ. (3'') | 85/00 | 59/50 | 56/95 | - |
| 110 மி- மீ: (4'') | 121/90 | 84/00 | 63/60 | 50/75 |

இணைப்புகள் 1- க்கு ரூ. 3/30 முதல்

செண்ட் அந்தனீஸ் இண்டஸ்ட்றீஸ் குழு
512, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலை பேசி: 20622 - 4

ANTON

முழுமைச் சேவையின் முன்னோடி

RJA 7278

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம் ரத்து

புங்குடுதீவு செவ்'

புங்குடுதீவு மண்காடு பல. நோ. கூ. சங்கக்கிளை முகாமையாளர் ஒருவர் திடீர் இடமாற்றம் செய்யப்படவுள்ளதைத் தொடர்ந்து அந்த இடமாற்றத்தை ரத்துச்செய்யும் முகமாக அப்பகுதி மக்கள் சேர்ந்து அறுபதுக்கும் மேற்பட்ட கையொப்பம் இடப்பட்ட மகஜர் ஒன்றினை புங்-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் திரு. எம். சச்சிதானந்தத்திடம் கையளித்தனர். இதனையடுத்து அந்த இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்—இலங்கை

## 1986/87 (MAQ) முதுகலைமாணித் தகுதிகாண் தேர்வுக்குப் பதிவு செய்தல்

பட்டப்படிப்புக்கு நேரடியாகப் பதிவு செய்வதற்குத் தகைமையற்றவர்களிடம் இருந்தும் பொதுக்கலைமாணித் தேர்வில் சித்தியெய்தியவர்களிடம் இருந்தும் 1987 ஜனவரி 9 ஆம் திகதிவரை மேற்படி தேர்வுக்குப் பதிவு செய்தற்பொருட்டு விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களைக் கலைப்பீடாதிபதியின் அலுவலகத்தில் 1986 டிசம்பர் 12-ஆம் திகதியிலிருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப படிவங்களை நேரடியாகப் பெறவிரும்புவோர் யாழ் பல்கலைக்கழக நிதிக்கிளைச் சிறுப்பரிடம் ரூ 10/- ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டொன்றினைக் கொடுத்தும், தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ் பல்கலைக்கழக நிதியாளர் பெயரில் பெற்ற காசுக்கட்டளை/ தபாற் கட்டளை ஒன்றுடன், 38 × 25 செ. மீ அளவுடையதும் ரூ 5/80 க்கான முத்திரை யொட்டிச் சுய முகவரியிடப்பட்டதுமான தபால் உறையை அனுப்பியும் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 1987 ஜனவரி 9ஆம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ கலைப்பீடாதிபதியின் அலுவலகத்தில் சேர்க்கப்படவேண்டும் இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
10- 12- 86

(A 3334)

---

ஈழத்துச் சிதம்பரத்தில் இன்றுரதோற்சவம்:

# தில்லைக்கூத்தன் திருநடனம் காரைநகரில் கண்டிடுவோம்

ஈழத்தின் சண்ணகத் திகழும் சைவாலயங்களின் பழமையும், புதுமையும் வரலாற்றுப் பெருமையும்; மூர்த்தி தல தீர்த்தவிசேடமும், வேதாகமநெறி முறை தவறாத பரிபாலனமும் மற்றும் பல்வேறு சிறப்புக்கள் மிகுந்த திருத்தலமாக ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவிலும் குறிப்பிடத்தக்கதாகும். இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் இந்தியாவிலே வசித்த தி..ரன் எனும் பெயருடைய பிராமணர் ஒருவரால் இவ்வாலயம் உண்டாக்கப்பட்டதென்பது முதியோர் கூற்றாகும். இவ்வாலயத்தின் தல வரலாறு பற்றி பல புராணக்கதைகள் உண்டு.

தற்போது இத்திருத்தலம் தேரோடும் வீதிகளோடு மூன்று பிராகாரங்கள். விமானங்கள் வியத்தகு வசந்த மண்டபம் அழகிய மூர்த்திகள் அலங்கார வாகனங்கள் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கே தினமும் நான்கு காலப் பூசையும் ஆண்டு தோறும் பங்குனி ஆடி மார்கழி ஆகிய மாதங்களில் மூன்று மகோற்சவங்களும் மற்றும் விசேட தினங்களும் நடைபெற்று வருகின்றன.

இன்றையதினம் நடராஜப் பெருமானர் தனது பரிவார மூர்த்திகள் சகிதம் சித்திரத் தேரில் பஞ்சரத பவனியாக ஆலய மூன்றும் வீதியாகிய மாமணி வீதியால் வலம்வருவார். அதிகாலை நான்குமணிக்கு திருப்பள்ளியெழுச்சியுடன் ஆரம்பமாகும் இ தோற்சவம் மறுநாட்காலை ஆறு மணிக்கு நடைபெற்ற நடேசர் ஆருத்திரா தரிசனத்துடன் நிறைவு பெறும்.

தீர்த்தோற்சவத்தில் காரைநகரில் உள்ள ஏனைய ஆலயங்களில் இருந்து தமது நேர்த்தியை முடிப்பதற்காக காவடிகள் எடுத்துவந்து ஈழத்துச் சிதம்பரத்தை அடைவது மாலை நடைபெறும் திருவூடல் உற்சவத்துடன் திருவெம்பாவை உற்சவம் நிறைவு பெறும்.

க. சிறீகரன்
காரைநகர்

மூல மூர்த்திகளுக்கு அபிஷேகமும் அதைத்தொடர்ந்து பூசையும் இடம்பெற்று காலை எட்டு மணிக்கு ஈழத்துச் சிதம்பர ஓதுவார் மூர்த்தி திரு மு. சுந்தரலிங்கத்தின் திருவெம்பாவைப் படிப்புடன் நடராஜப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேடபூசை நடைபெறும் அதைத் தொடர்ந்து நடராஜப் பெருமான் அம்பிகை சமேதராய் தனது பரிவார மூர்த்திகளுடன் ஈழத்து அனைத்து நாதஸ்வர தவில் வித்துவான்கள் மல்லாரி இராகம் இசைக்க, தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மார்கழிச் செவ்வந்திப்பூக்களால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளிச் சாத்துப் படியுடன் ஆனந்தத் தாண்டவமாடிய வண்ணம் தேருக்கு எழுந்தருளுவார்.

இன்றிரவு ஆலய வசந்த மண்டபத்தில் மணிவாசகர் விழாவும், அதைத் தொடர்ந்து ஈழத்து நாதஸ்வர தவில் வித்துவான்களின் விசேட மேளக்கச்சேரியுடன் இரவு 2 மணிக்கு ஆருத்திரா அபிஷேகம் நடைபெறும். அதிகாலை ஆறுமணிக்கு நடைபெறும் ஆருத்திரா தரிசனத்துடன் உற்சவம்முடிவுபெறும்

---

## ஐக்கிய நாணய சங்கம்

பண்டத்தரிப்பு, திங்கள்

சில்லாலையில் "இலங்கை மாதா ஐக்கியநாணய சங்கம்" என்ற பெயரில் புதிய ஐக்கிய நாணய சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

சில்லாலை இலங்கை மாதா கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெற்ற இதன் அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் திரு என் அல்போன்சஸ் பண்டத்தரிப்பு பல நோ. கூ. சங்கத் தலைவர் திரு. ஆ. ஜேசுதாசன், பண்டத்தரிப்பு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி ரூபி ஜேசுதாசன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்கள். [எ]

## திருட்டு அதிகரிப்பு

(நமது கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி நகரப்பகுதியில் இராணுவ அசம்பாவிதத்தின் பின்னர் பூட்டப்பட்டு அநாதரவாகக் கிடக்கும் வீடுகள் கடைகளில் தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து செல்வதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி வீடுகள் கடைகள் எல்லாம் கதவுகள் உடைக்கப்பட்டு திறந்த நிலையிலே காணப்படுகின்றன. திருடர்கள் சமயல் பாத்திரம் முதல்கொண்டு வீடுகளின் கதவு நிலைகள், ஓடுகள், தகரங்கள் முதலானவற்றைக்கூட திருடிச் செல்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. (எ)

## இரு புதிய லயன்ஸ் கழகங்கள்

பண்டத்தரிப்பு திங்கள்

மானிப்பாய் லயன்ஸ் கழகம் என்ற பெயரிலும், மல்லாகம் லயன்ஸ் கழகம் என்ற பெயரிலும் இரு புதிய லயன்ஸ் கழகங்கள் யாழ் மாவட்டத்தில் விரைவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

## உபகுழுக்கள் அமைப்பு

பண்டத்தரிப்பு, திங்கள்

பண்டத்தரிப்பு விழிப்புக்குழு பல்துறை அபிவிருத்தியை கருத்திற் கொண்டு ஐந்து பிரதான உபகுழுக்களை அமைத்துள்ளது கல்வி, கலை, கலாசாரக்குழு, சுயபொருளாதார அபிவிருத்திக் குழு, சுகாதார, மகளிர்துறை, அரசியல் தகவல் பிரசாரக்குழு, தமிழீழ கிராம நீதிமன்று ஆகியவைகளே இந்த ஐந்து அமைப்புகளாகும்.

இதேவேளை பண்டத்தரிப்பு-சில்லாலை ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 65 பேர் விழிப்புக்குழு உறுப்பினர்களாக அங்கத்துவம் பெற்றுள்ளனர் (எ)

## இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

படரும். கொடுக்கல் வாங்கலைத் தவிர்க்கவும்.

கும்பம்:- பாக்கிய விருத்தியுண்டு. பரம்பொருளின் அருளும் உண்டு. பிதாவழிப் பிணியும் நீங்கும்.

மீனம்:- இல்லத்தில் இனிமை தவழும். வாகன சுகமுமுண்டு குறிக்கோள் வெற்றியுமுண்டாம் சுபநாள்.

திருமலை
வே. ரவீந்திரன்

---


# யானைமார்க் குளிர்பானங்கள்

யானை மார்க் குளிர்பான பாவனையாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும், ஓர் நற்செய்தி. 'சுவ ஸ்’, புலோலி சினிமா கட்டிடம் பருத்தித்துறை ஆகிய நாங்கள் வடமராட்சிப்பகுதிக்கும், மற்றும் அச்சுவேலிப் பகுதிக்கும் ஏகவிநியோகஸ்தர்களாக சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத் தருகின்றோம்.

தங்கள் ஆதரவை நாடும்,
உரிமையாளர்:
சு. வே. சிவானந்தன்

"சுவர்ணாஸ்",
புலோலி சினிமா கட்டிடம்,
பருத்தித்துறை.


---

## மாவிட்டபுரம் இணக்கசபை

காணி உரிமை கோரும் அறிவித்தல்

மாவிட்டபுரத்தில் உள்ள "கிளானைக் கலட்டி" என்னும் ஆதனம் தொடர்பாகப் பிரச்னை எழுந்துள்ளதாக இச்சபைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாதனத்தில் உரிமை கோருபவர்கள் 1986ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதிக்கு முன்பதாக இச்சபையின் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சோ. செல்வரத்தினம்.
செயலாளர்

மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

[C 6386]

---

## கிளிநொச்சியில் இராணுவம் எச்சரிக்கை

கிளிநொச்சி நிருபர்

கிளிநொச்சி. பரந்தன் போன்ற பகுதிகளிலுள்ள சகல கட்டடங்களையும் உடைத்து தரைமட்டமாக்கி விடப் போவதாக இராணுவத்தினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

அண்மையில் இராணுவத்தால் கைதாகி விடுதலை செய்யப்பட்ட திருநகர் வாசி ஒருவரிடம் இராணுவத்தினர் இதனைத் தெரிவித்துள்ளனராம். (ஒ)

## முதலுதவியாளர் பங்களிப்பு

பண்டத்தரிப்பு, திங்கள்

"உயிரிழப்புக்களும் பதட்டங்களும் அதிகரித்துவரும் இக்கால கட்டத்தில் முதலுதவியாளர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பை கடமையுணர்வுடன் செலுத்தி சேவையாற்றவேண்டியது அவசியமாகும்" என்று சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் சண்டிலிப்பாய் கிளையின் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி கூறினர்.

## நல்லியக்கசபை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செவ்

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபை நடாத்திய க. பொ. த (சாதாரண) கணித, விஞ்ஞான போட்டி பாலர் பாடசாலைகள் நுண் அறிவுப் போட்டி பரிசளிப்புவிழா எதிர்வரும் 21-ம் திகதி ஞாயிறு மாலை ஆசிரியர் திரு த. சிவகுமாரன் தலைமையில் மேற்படி சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக அராலி இந்துக் கல்லூரி உப அதிபர் திரு ரி. டானியல் கலந்துகொள்வார். பரிசளிப்பைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் பட்டிமன்றமும் இடம்பெறும். (சி)

## பட்டதாரிகள் சங்கம் புனர் நிர்மாணம்

கிளிநொச்சி திங்கள்

யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் இருந்து வெளியேறு பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் முகமாகவும் இக்கல்லூரியின் அபிவிருத்தியை நோக்கமாகொண்டும் கல்லூரி பட்டதாரிகள் சங்கமாகிய டி.ஏ.எம். பட்டதாரிகள் சங்கம் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

## மரம் நாட்டு வைபவம்

பண்டத்தரிப்பு, திங்கள்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினால் சங்கானை சந்தை மைதானத்தில் மரம்நாட்டு வைபவம் ஒன்று நடாத்தப்பட்டது.

கழகத் தலைவர் டாக்டர் எமில் அத்தனாசியார் தலைமையில் நடைபெற்ற இந்த மரம் நாட்டு வைபவத்தில் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சு. வைத்திலிங்கம், தொழிலதிபர் திரு. துரை சிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

16 12 86 செவ்வாய்க்கிழமை

## 27ம் திகதி எழுத்துப் பரீட்சை

கொழும்பு, திங்கள்

1987ம் ஆண்டு ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கான ஆங்கில மொழி மூல பயிற்சி நெறிக்கான எழுத்துப் பரீட்சை இம்மாதம் 27ந் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் யாவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் திரு க சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இதே வேளை கோப்பாய், பலாலி கலாசாலைகளுக்கான மற்றைய பரீட்சாத்திகளின் நேர்முகப் பரீட்சை இம்மாதம் 17ம், 18ம், 19ம் திகதிகளில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ரா)

## கல்முனை அசம்பாவிதங்கள்:
# அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கண்டனம்

கொழும்பு, திங்கள்

கல்முனை நகரின் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவங்களின் பல அப்பாவிகள் பலியானதையிட்டும், ஒன்றுமறியாதோரின் வீடுகள், சொத்துக்கள் சேதமாக்கப்பட்டதையிட்டும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனது அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக இக்கட்சி விடுத்துள்ள அறிக்கையொன்றி; இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று காணப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வேளையில் சில தீய சக்திகள் திட்டமிட்டு இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் உணர்ச்சி வசப்படாமல் நிதானத்துடனும், பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுள்ள இக்கட்சி சட்டத்தை நிலைநாட்டுபவர்களும் இது போன்று நடந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுள்ளது.

## கல்முனை அசம்பாவிதங்கள்:
# இன்றும், நாளையும் ஹர்த்தால்

(மட்டக்களப்பு நிருபர்)

கல்முனையில் இன்றும் நாளையும் ஹர்த்தால் அனுஷ்டிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமையன்று இப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்கும், அச்சம்பவத்தில் படையினர் நடந்து கொண்ட விதத்துக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனிடையே இச்சம்பவங்கள் பற்றிய பாரபட்சமற்ற விசாரணையொன்றை நடத்துமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறும் கல்முனை எம். பி ஜனாப் மன்சூர் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாப் மன்சூர், கல்முனை உதவி அரசாங்க அதிபர் ஜனாப் முகியூதீன் ஆகியோரும் நேற்று முன்தினம் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்.

ஜனாப் மன்சூர் கொழும்பு திரும்பியவுடன் கல்முனை சம்பவங்கள் பற்றி ஜனாதிபதியிடம் நேரடியாகத் தெரிவிப்பாரெனத் தெரியவருகிறது. (கூ-ன)

## மீண்டும் ரயில்சேவை

கொழும்பு, செவ்

அநுராதபுரம் - தலைமன்னார் திருகோணமலை ரயில் சேவைகள் நேற்றுக்காலை முதல் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த பல மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த ரயில் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது (சி)

## வடக்குநோக்கி 500 இராணுவம்

கொழும்பு, திங்

வவனியாவிலிருந்து சுமார் ஐநூறு ராணுவத்தினர் வட பகுதி நோக்கி கால் நடையாக வந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கிலிருந்து வந்ததாகக் கூறப்படும் இவர்கள் நேற்று மாலை வவனியாவிலிருந்து புறப்பட்டனர்.

## வழிமறிப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், செவ்:

விடுதலை இயக்கங்கள் ஒன்றுபட்டு கோரி உரும்பராயில் கிறிஸ்தவ தேவாலயம் முன்னால் வழிமறிப்புப் போராட்டம் நேற்று நடைபெற்றது.

நேற்று முன்தினம் மல்லாகம், நீர்வேலிப்பிள்ளையார் கோவில் அருகாமை ஆகிய இடங்களில் சில மணி நேரம் நடைபெற்றன.

மானிப்பாயிலும், குருநகரிலும் நேற்று ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது.

## இருவர் தவிர ஏனையோர் விடுதலை

முல்லைத்தீவு, திங்.

முள்ளியவளை ஒடுவாழுனைப் பகுதியில் கடந்த மாதம் இராணுவ சோதனையின் போது கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களில் வவனியாவில் தடுத்து வைக்கப்பட்ட 14 பேரில் இருவர் தவிர ஏனையோர் கடந்த 0-ம் திகதி வவனியவில் விடுதலை செய்யப்பட்டனர்.

## இன்னல் குறித்து விளக்கப்படும்

மட்டக்களப்பு நிருபர்

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள ஊரணியில் புதியதடைமுகாமொன்று அமைக்கப்பட்டுள்ளதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு விளக்கப்படவுள்ளது.

இது சம்பந்தமான முடிவொன்று மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் வாராந்தக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது எடுக்கப்பட்டது. (கூ-ன)

## காங்கேசன்துறையிலிருந்து
# பெருமளவு இராணுவம் பலாலிவரை பயணம்!

மாவிட்டபுரம், திங்

இருநூற்றுக்கு மேற்பட்ட ராணுவத்தினர் ஐந்து கவச வாகனங்களிலும், 25க்கும் மேற்பட்ட லொறிகளிலும் காங்கேசன்துறையிலிருந்து பலாலி ராணுவமுகாம் நோக்கி நேற்று முற்பகல் சென்றனர்.

இவர்களுடன் பாரம் தூக்கும் 'கிறேன்' ஒன்றும் எடுத்துச் செல்லப்பட்டது.

சாக்கு, முள்ளுக்கம்பி டயர்கள் என்பனவும் லொறிகளில் எடுத்துச்செல்லப்பட்டன.

இச்சம்பவத்தையடுத்து மக்கள் மத்தியில் பதற்றம் நிலவிய போதும் எதுவித அனர்த்தங்களும் ஏற்படவில்லை.

## மரண அறிவித்தல்

### மதர் ஞானம் முத்துத்தம்பி

சுண்டுக்குளி, இலங்கை, பெந்தெகொஸ்தே சபையைச் சேர்ந்த மதர் ஞானம் முத்துத்தம்பி மகிமைக்குள் பிரவேசித்தார் அடக்க ஆராதனை [16-12 86] இன்று மாலை 2 மணிக்கு நடைபெறும். நல்லடக்கத்திற்காக கொழும்புத்துறையிலுள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபை சேமக்காலைக்கு பிற்பகல் 3-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

[C-6403] கண்டி வீதி, சுண்டுக்குளி

### S N. தியாகராசா

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஏழாலை தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய S N தியாகராசா [Retired Assistant Commissioner of Labour, Colombo] [15-12-86 அன்று காலமானார் இவர் இரட்ணபூரணத்தின் அன்புக் கணவரும், டக்ஷினியின் அன்புத் தந்தையுமாவார் அன்னாரின் பூதவுடல் 16-12-86 (இன்று) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் ஈமக்கிரியைகளுக்காக கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை நண்பர்களும், உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

(C6405) தகவல்: திருமதி தியாகராஜா

### A. R. சிறில்

A R சிறில் அவர்கள் 13-12-86 ல் காலமாகிவிட்டார் (இயக்குநர் J. D C. Trading Company Private Ltd) இவர் குயினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி எல். ஜே. சிறிலின் மகனும், ரஞ்சன், திலீப்லோயலா [பேபி], குமார், இமானுவேல், (சுவீற்றி அன்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தி, கிருஷாந்தி ஈஸ்வரி ஆகியோரின் மாமனாரும், வித்தியா, மாரிதா, அலெக்ஸ் புளொறன்ரினு ஆகியோரின் பாட்டனாரும், திருமதி பேபி மார்ட்டீன், திருமதி மேரிசிலவல் ரத்தினசிங்கம் திருமதி லிசில் லொறன்ஸ் பிள்ளை, திருமதி ஜெயராணி பிள்ளைநாயகம், காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் சகோதரரும், பிறின்ஸ், றிச்சாட், லொறென்ஸ்பிள்ளை, திருமதி ராணி அரியராஜா, திருமதி குயின்ரின் சஞ்சமநாதன், திருமதி புஷ்பம் சிறில், திரு நவரெத்தினம் பிள்ளைநாயகம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 9 A, டீல்பிளேஸ், கொள்ளுப்பிட்டியிலிருந்து இறுதிக்கிரியைகளுக்காக 17-12-86 புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு ஜாவத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: S L. சிறில், 6 டீல் பிளேஸ் கொழும்பு - 3

A-3335

## வீடுபார்க்கச் சென்றவர்மீது இராணுவம் தாக்குதல்!

சுன்னாகம், செவ்,

மயிலிட்டியில் உள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்ற வயோதிபர் ஒருவர் அவரது வீட்டுக்குள் பதுங்கி இருந்த இராணுவத்தினரின் பலத்த தாக்குதலுக்கு இலக்காகி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மயிலிட்டி தெற்கு வாசியான பூ. மயில்வாகனம் (வயது 80) என்பவரே இராணுவத்தின் பலத்த தாக்குதலுக்கு இலக்கானவராவர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது இராணுவ கெடுபிடியினால் மயிலிட்டியில் உள்ள தனது சொந்த வீட்டை விட்டு வெளியேறிய இந்த வயோதிபர் வீடு என்ன நிலையில் இருக்கிறது என்று பார்க்கச் சென்ற சமயம் அவரது வீட்டுக்குள் பதுங்கி இருந்த இராணுவத்தினர் அவரைக் கூப்பிட்டுப் பலமாகத் தாக்கிய பின் சப்பாத்துக் காலால் அவரை மிதித்தனராம்.

இதன் பின் அந்த வயோதிபரை இனிமேல இந்தப்பக்கம் திரும்பிவரக்கூடாது என்று எச்சரித்து அனுப்பினார்களாம். (வா)

## பூங்காவன வீதித் திருத்தம்
# லொறி, பஸ், வண்டிகளிடம் பணம் அறவிடத் தீர்மானம்!

யாழ்ப்பாணம், செவ்.

கிளிநொச்சிக்குப் போகும் பூங்காவனப்பாதையை திருத்தியமைப்பதற்கென தூரசேவைப் போக்குவரத்தில் ஈடுபடும் சகல லொறி, பஸ் உரிமையாளர்களும் வாகனம் ஒன்றிற்கு ஆயிரம் ரூபா வீதம் செலுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லொறிப்போக்குவரத்துச்சங்கத்தில் பொதுக்கூட்டம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது இக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

இத்தொகையை இம் மாதம் 15-ந் திகதியிலிருந்து 31-ந் திகதிக்குள் தூரசேவைப்போக்குவரத்தில் ஈடுபடும் சகல பஸ், லொறி உரிமையாளர்களும் பிரயாணம் செய்யும் வழியில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் இடத்திலுள்ள சங்கப்பிரதிநிதியிடம் கையளிக்கும்படியும் மேற்படி சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## 27 பேர் கைது

கொழும்பு, திங்

மேற்கு ஜேர்மனில் சட்ட விரோதமாக நிதி வசூலித்தது உட்பட பல குற்றச்சாட்டுகளின் பேரில் 27 இலங்கைத்தமிழரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செவ்:

கோண்டாவில் பஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் திருவாசகம் முற்றும் ஓதலை ஓய்வு பெற்ற அதிபர் சபா ஆனந்தர் ஆரம்பித்தவைத்தார்.

பண்ணிசை வேந்தர் இரா: இராசரத்தினம், திரு நா: கமலநாதன் பண்டிதர் வே: சண்முகலிங்கம், ஆசிரியர் திரு ஆ திருநாவுக்கரசு, ஆசிரியர் திரு மு இராசையா, ஆசிரியர் ஆகியோர் திருவாசகம் முற்றும் ஓதலை தொடர்ந்து நடாத்தி வருகிறார்கள்.

திருவாதிரை தினமாகிய நாளை புதன்கிழமை பிற்பகல் திரு. ஆனந்தர் திருவாசகம் ஓதலை பூர்த்திசெய்து வைப்பார் ஆலய மண்டபத்தில் மணிவாசகர்விழா நடைபெறும் இவ்வைபவத்தில் பண்டித வித்துவான் இ. திருநாவுக்கரசு "திருவாசகம்" என்னும் பொருள் பற்றி சிறப்பு சொற்பொழிவாற்றுவார்.

## ஈ பி ஆர் எல் எவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

துவதில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று அதிகாலை சாவகச்சேரியில் ஒட்டத்தை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்தபெழுது இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் தளப்பிராந்தியப் பொறுப்பாளர் கபூர் மரணமடைந்துள்ளதாக அந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

### மன்னாரில்

கடந்த இரு நாட்களில் நடைபெற்ற இச்சம்பவத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தரப்பில் மூவரும், விடுதலைப் புலிகள் தரப்பில் மன்னார்ப் பகுதியில் ஒருவரும் மரணமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (மா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/84 Eelanadu P. O. Box 49 Telegrame :Eelanadu Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org